12.11.2025 அசல் வழக்கு எண். 32/2011 Starting Time : 12.00 a.m.

வா.சா.1 திரு. குமார், த/பெ. சின்னையா.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தயாரிக்கப்பட்டதா என்றால் நான் சொல்லி தயாரிக்கப்பட்டதாகும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ஊராட்சியில் குடிநீர் தொட்டி தண்ணீர் எடுத்துவிடும் வேலையில் இருக்கிறேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் இடத்தை பிரதிவாதிகள் பிடித்துக்கொண்டதால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்து என்று நான் குறிப்பிடப்பட்டுள்ள பட்சத்தில் மேற்படி சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா என்றால் பூர்வீக சொத்துக்கள் தான். எனது தகப்பனாரின் அனுபவத்தின் பேரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் என்று என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனாருக்கு முன்பு தாவா சொத்துக்கள் யாரிடம் இருந்தது என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் என் தகப்பனார் பெயரில் பட்டா இருந்தது தற்போது நான் அனுபவித்து வருகிறேன். நான் பரம்பரையாக வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்று கூறியுள்ள பட்சத்தில் யார் யார் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் நான் தான் அனுபவித்து வருகிறேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் அனுபவித்து வருகிறேன் என்றால் எனது அப்பா எனக்கு கொடுத்த பட்டாவின்படி அனுபவித்து வருகிறேன். மேற்படி பட்டா நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் அரசாங்கம் வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது அப்பாவிற்கு அரசாங்கம் கொடுத்தது என்றால் சரிதான். அந்த பட்டாபடிதான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த பட்டாவில் குறிப்பிட்டுள்ள அளவுகள் கூற முடியாமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் எனக்கு தெரியாது. படிப்பறிவு இல்லாவிட்டாலும் அளவுகள் கூற முடியும் என்றால் எனக்குத் தெரியாது. எனது தகப்பனார் கடந்த 05.08.1996ல் காலமாகிவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாருக்கு யார் யார் வாரிசுகள் என்று வாரிசு சான்றுகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இரண்டு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களில் எனது தகப்பனார் காலமாகிவிட்ட பிறகு மேற்படி சொத்துக்களை பொருத்து எனது தாயாரும் சகோதரிகளும் பாக உரிமையை எனக்கும் எனது தம்பிக்கும் விட்டுகொடுத்துவிட்டுவிட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாயருக்கு சொத்துக்களை விட்டுகொடுத்தவிட்ட பிறகு அவர் எதற்காக இந்த வழக்கில் தரப்பினராக உள்ளார் என்றால் அவரை பிரதிவாதிகள் அடித்தார்கள் அதனால்தான் அவரும் இந்த வழக்கில் உள்ளார். எனது தாயார் சொத்துக்களை விட்டுகொடுத்துவிட்ட பிறகு

அவர் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், மேற்படி அவசியம் இல்லாத தரப்பினரை வழக்கில் சேர்த்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது சகோதரிகளை ஏன் சேர்க்கவில்லை என்றால் அவர்களை வெளியூரில் திருமணம் செய்து கொடுத்துவிட்டோம். எனது சகோதரிகளை இந்த வழக்கில் அவசிய தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல. என் சகோதரர் பெயர் என்னவென்றால் ரவி. அவர் எங்கு வசித்து வருகிறார் என்றால் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் வசித்து வருகிறார். அவருக்கு தனியாக வீடு உள்ளதா என்றால் இல்லை. அவர் வீட்டை விற்று விட்டார். 1999-ல் நானும் எனது சகோதரரும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் இல்லை. பாகப்பரிவினை செய்து கொள்ளாத பட்சத்தில் எனது தம்பிக்கு எவ்வாறு பாகம் வந்தது என்றால் அப்பா சொத்தில் அவருக்கும் பங்கு உண்டு. என் தம்பி தாவா சொத்துக்களில் அவரது பாகத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்று சொல்லியுள்ள பட்சத்தில் எப்பொழுது கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. எனது தம்பிக்கு எந்த பக்கம் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் தாவா சொத்துக்களில் சூரியன் உதிக்கும் பக்கம் ஒதுக்கப்பட்டது. சூரியன் உதிக்கும் பக்கம் கிழக்கு பக்கம் என்றால் சரிதான். எனது தம்பியிடம் சொத்துக்களை அளந்து பார்த்து கிரையம் பெற்றேனா என்றால் எனக்கு தெரியவில்லை. ஆனால் பத்திரத்தில் உள்ளது. கிரையம் பெறும்போது அளந்து பார்த்து வாங்கினேனா என்றால் இல்லை. ஏன் அளந்து பார்த்து வாங்கவில்லை என்றால் எனது தாயார் சிட்டாவில் உள்ளது என்றும் கூறியதால், சிட்டாவில் உள்ள பங்கு படி கிரையம் பெற்று கொண்டேன். பிரதிவாதிகள் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் கருத்து வேறுபாடு உள்ளதா என்றால் உள்ளது. என் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சதுர அடிகள் தெரியுமா என்றால் 3 செண்ட் ஆகும். பிரதிவாதிகளின் வீட்டின் சர்வே எண் மற்றும் சதுரடி தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களில் தட்டோடு வீட்டில் வாழ்ந்து வருகிறேன் என்று கூறியுள்ள பட்சத்தில் அந்த தட்டோடு வீட்டின் அளவுகள் தெரியுமா என்றால் அது என் அப்பா கட்டிய வீடு ஆகும். அந்த வீடு தவிர வேறு ஏதேனும் வீடு உள்ளதா என்றால் எனக்கு வேறு ஒரு இடத்தில் வீடு உள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது வீட்டிற்கு மேற்கே 6 அடி அகல சந்து வழி விட்டு வீடு கட்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் தான் பிரச்சனை உள்ளது. அந்த 6 அடி சந்து அளந்து பார்த்து கட்டப்பட்டதா என்றால் எனது அப்பாவிற்குதான் தெரியும். அந்த 6 அடி சந்தில் சுவர் ஏதேனும் எழுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ள இடம் பூர்வீக சொத்தா என்றால் இல்லை. அரசாங்கம் வழங்கப்பட்ட பட்டா மூலம் கிடைத்த சொத்துக்கள் ஆகும். பிரதிவாதி மெத்தை வீடு கட்டியுள்ளதாக கூறியுள்ள பட்சத்தில் அப்போது நான் ஆட்சேபணை செய்தேனா என்றால் நான் சென்னையில் இருந்தேன். எனது தாயார் அளந்து பார்த்து கட்ட சொல்ல ஆட்சேபணை செய்தார். சென்னையில் நான் எவ்வளவு நாட்களாக இருந்தேன் என்றால் 10 நாட்கள் இருந்தேன். மேற்படி

பிரதிவாதியின் மெத்தை வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் தெரியாது. பிரதிவாதி வீடு கட்டும் பொழுது அளந்து பார்த்து கட்டச் சொல்லி பஞ்சாயத்து ஏதும் பேசினோமா என்றால் இல்லை. பிரதிவாதி வீடு கட்டியதற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் எனது தாயார் கொடுத்தார். நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். அங்கு என்ன சொன்னார்கள் என்றால் அளந்து பார்த்து அவர்கள் இடத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். பிரதிவாதிகள் தான் அளப்பதற்கு முயற்சி செய்யவில்லை என்றால் நானாவது செய்திருக்கலாம் என்றால் என் இடம் இருப்பதால் அவரை நான் அளந்து பார்த்து வீடு கட்ட சொன்னேன். என் இடம் இருப்பதாக கூறியிருக்கும் பட்சத்தில் பிறகு எதற்காக நான் வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் என் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியதால் நான் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்த போது பிரதிவாதிகள் வீடு கட்டி விட்டார்கள் என்றால் கட்டிக் கொண்டிருந்தார்கள், அப்பொழுது குழி தோண்டிக் கொண்டிருந்தபோது எனது அம்மா கேட்டதற்கு அவரை அடித்து கீழே தள்ளி விட்டார்கள். எந்த வருடம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் 4 அடி சுவர் எழுப்பியுள்ளதாக கூறியிருந்த நிலையில் மெத்தை வீடு கட்டி விட்டார்கள் என்று கூறியுள்ள நிலையில் எது சரி என்றால் என் இடத்தையும் சேர்த்து வீடு கட்டி விட்டார்கள்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

(ஓம்)செ.மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.